ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2232/37 - 2021 ජුනි මස 18 වැනි සිකුරාදා - 2021.06.18
*2232/37 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**7 ஆவது திருத்தம்**

இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

*பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தஞ் செய்யப்பட்ட, இல. 1842/2 மற்றும் 2013, திசெம்பர் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளத் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2021, யூன் 01.*

பகுதி I

*திருத்த இலக்கம் 1 – 2015, யூலை 16 ஆந் திகதிய மற்றும் 1923/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 2 – 2016, ஓகத்து 11 ஆந் திகதிய மற்றும் 1979/33 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 3 – 2018, ஓகத்து 30 ஆந் திகதிய மற்றும் 2086/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 4 – 2018, செத்தெம்பர் 14 ஆந் திகதிய மற்றும் 2088/58 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 5 – 2018, நவெம்பர் 02 ஆந் திகதிய மற்றும் 2095/48 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 6 – 2019, ஓகத்து 19 ஆந் திகதிய மற்றும் 2137/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தல்*

1A - G 34445 — 25 (2021/06)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பகுதி II

10.2.3 (ஆ)

(iii) பூர்த்திசெய்ய வேண்டிய ஏனைய தகைமைகள்

(ஆ) மற்றும் (இ) ஆகியவற்றை நீக்கப்பட்டு பின்வரும் பகுதி (ஆ) என உட்படுத்துக.

பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.2.5 தகைமைகள் பற்றிய வரையறைகள்:

தொடர் இல. (i) நீக்கப்படுகின்றது. ஏனைய விடயங்கள் அவ்வாறே செயல்வலுப்பெறும்.

10.2.6 ஆட்சேர்ப்பு முறை :

(ii) எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) மேலே (ii) துணைப் பந்தியில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் 25% ஆகிய இரண்டினதும் கூட்டுத் தொகையாக கொள்ளப்படுகின்ற எண்ணிக்கையுடையோர் மாத்திரமே சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகைமைகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேலே காட்டப்படுகின்ற எண்ணிக்கையை விட குறைவாக இருக்குமிடத்து அத்தகைய சந்தர்ப்பங்களில் அவ்வாறு தகைமைகளைப் பெற்ற எண்ணிக்கையுடைய பரீட்சார்த்திகள் மாத்திரமே சாதாரண நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

இந்தப் பந்தியின் (i), (iv), (v) மற்றும் (vi) ஆகிய துணைப் பந்திகள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

10.2.7 எழுத்துமூலப் பரீட்சை

(அ) திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்குரிய எழுத்துமூலப் பரீட்சை தொடர்பான விடயங்கள் 'ஆ' பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தப் பந்தியின் (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

10.2.9 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை : ஆகிய பந்திக்கு கீழால் உள்ள குறிப்பு II நீக்கப்படுகின்றது.

13.1 சேவையின் தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு வழங்குதல் :

13.1.1. (அ) (iv) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

13.2 சேவையின் தரம் II இலிருந்து தரம் I க்கு பதவி உயர்வு வழங்குதல்.

13.2 (அ) (iii) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

13.3 சேவையின் தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குதல்.

13.3 (அ) (v) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

தற்போதுள்ள “ஆ” பின்னிணைப்புக்குப் பகரமாகப் பின்வரும் “ஆ” பின்னிணைப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

**“ஆ” பின்னிணைப்பு**

திறந்த பிரிவின் கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம் (III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பாட விதானம்

அரசாங்க நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை இதற்கு ஏற்புடையதாகும். இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வருடாந்தம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் போட்டிப் பரீட்சையின் முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி) ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் மற்றும் இரண்டு வினாப்பத்திரங்களினதும் மொத்தப் புள்ளிகளாக 100 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் மேற்படி பரீட்சையின் இரண்டாவது பகுதிக்கு அழைக்கப்படுவர்.

(அ) அரசாங்க நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சையின் முதலாம் பகுதி (பொதுப் பகுதி)

(I) சாராம்சம்

| வினாப் பத்திரம் | காலம் | வினாப் பத்திரத்தின் தன்மை |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 1 ½ மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40. பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். |
| 2. கிரகித்தல் | 2 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40. பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். |

(II) பாட விதானம்

| நுண்ணறிவுப் பரீட்சை |
|---|
| பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், பிரதியிடல், பொருட்கோடல், தொடர்பு காணல், பெயர்ப்பு, பிரச்சினைகளைத் தீர்க்கும் இயலுமை, காரண காரிய தொடர்புகளை புரிந்துகொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றுதல் முதலிய இயலுமைகளை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. |
| கிரகித்தல் |
| பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களை புரிந்து கொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாராம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |

(ஆ) அரசாங்க நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சையின் இரண்டாவது பகுதி (இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விசேட பகுதி)

(I) சாராம்சம்

| வினாப் பத்திரம் | காலம் | வினாப் பத்திரத்தின் தன்மை |
|---|---|---|
| சமூக, பொருளாதார மற்றும் அரசியல் போக்குகள் | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40. கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/ அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். |
| முகாமைத்துவ உளச்சார்பு | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40. கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/ அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். |
| ஆக்கப்பூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40.<br>கட்டுரைகள் / பகுதியளவு கட்டமைக்கப்பட்ட கட்டுரைகளைக் கொண்டிருக்கும். |

(II) பாட விதானம்

| |
|---|
| *சமூக, பொருளாதார மற்றும் அரசியல் போக்குகள்* |
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சிக்கல்களுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், முந்துரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. |
| *முகாமைத்துவ உளச்சார்பு* |
| சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான காரணங்களை இனங்காணல், தீர்மானம் மேற்கொள்ளல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளை நடாத்திச் செல்லுதல், தொடர்பாடல் திறமை, சுயஒழுக்கக் கொள்கை மற்றும் உபாய முறைகளைத் தயாரித்தல், மனவெழுச்சிசார் நுண்மதி எனும் வகையில் பரீட்சார்த்தியிடம் முன்வைக்கப்படுகின்ற சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு பரீட்சார்த்தியிடமுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. |
| *ஆக்கப்பூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள்* |
| தரப்பட்ட தலையங்கங்கள் / தொனிப்பொருட்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தெரிவு செய்யும் தலையங்கங்கள் / தொனிப்பொருட்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி காட்டுகின்ற தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் முக்கிய கருத்துக்களைத் தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் பரீட்சார்த்தியிடமுள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. |

*06-368*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.